# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2499/02 - 2026 ජූලි මස 27 වැනි සඳුදා - 2026.07.27

2499/02 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**ஹொரண மாவட்ட பொது வைத்தியசாலையை சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருதல்**

தற்போது மேல் மாகாண சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் ஹொரணை மாவட்ட பொது வைத்தியசாலை, களுத்துறை மாவட்டத்தின் ஹொரணை நகரில் அமைந்துள்ளது. முன்னதாக "A" தர ஆதார வைத்தியசாலையாக வகைப்படுத்தப்பட்டிருந்த ஹொரணை ஆதார வைத்தியசாலை, 2022 யூன் 03 ஆம் திகதி மாவட்ட பொது வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டது. வைத்தியசாலையின் அபிவிருத்தி மற்றும் எதிர்கால மேம்பாடுகளுக்கு தாக்கம் செலுத்தக்கூடிய சவால்களை கருத்தில் கொண்டு, இந்த வைத்தியசாலையை சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அதன்படி, ஹொரணை மாவட்ட பொது வைத்தியசாலையை சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சுக்கு ஒப்படைப்பதற்கு மேல் மாகாண கௌரவ ஆளுநரினால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஹொரணை மாவட்ட பொது வைத்தியசாலையை அபிவிருத்தி செய்து அதன் வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், அந்த வைத்தியசாலை சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் கீழ் கொண்டு வருவதற்கு அமைச்சரவையினால் 2026 யூன் 30 ஆம் திகதிய CP/26/1201/815/071 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளுக்கும், அரச சேவைகள் ஆணைக்குழுவின் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளுக்கும் உட்பட்டு இந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

விசேட வைத்தியர் **அனில் ஜாசிங்க**,
செயலாளர்,
சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு.

இல. 385, "சுவசிரிபாய",
சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2026, யூலை 23.

EOG 07 - 0372


1A - G 47382 - 04 (2026/07) *இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*